# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆடி 20 திங்கட்கிழமை (05-08-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 244


# ஆனையிறவு முகாமைச் சூழ நேற்றுச் சண்டை மூண்டது!

## தொடர்ந்தும் முகாமை ராணுவம் வைத்திருக்குமா?

ஆனையிறவு இராணுவ முகாமைச் சுற்றி விடுதலைப் புலிகள் அமைத்திருந்த முற்றுகையை ஸ்ரீலங்கா இராணுவத்தினர் உடைத்த போதிலும், அவர்கள் அங்கு தொடர்ந்து நிலைகொண்டிருப்பார்களா? இது சந்தேகத்துக்குரியதொன்று. அந்த முகாம் அமைந்துள்ள இட — கள நிலைமைகள் (Logistics) தொடர்ந்தும் அங்கு முகாமை வைத்திருக்க சாதகமானவையல்ல.

இவ்வாறு இராணுவ நிபுணர்கள் கருதுவதாக பி. பி. ஸி. தனது நேற்றைய கண்ணோட்டத்தில் தெரிவித்தது.

ஆனால் முகாமை படையினர் பலப்படுத்தி வருவதாக ஸ்ரீலங்கா இராணுவ அதிகாரிகளை மேற்கோள்காட்டி கொழும்பு வானொலி அறிவித்தது.

ஆனையிறவு முற்றுகை உடைக்கப்பட்டாலும், இது எத்தரப்பாருக்கும் வெற்றியில்லை என்றே கருதப்பட வேண்டும் என்றும் பி. பி. ஸி மேலும் தெரிவித்தது. (உ-3)

## கொம்படியிலும் படையினர் நகர முயற்சி

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 5

முற்றுகைக்கு உள்ளாகியிருந்த ஆனையிறவு இராணுவ முகாமுக்குள் படையினரின் மீட்பு அணி நேற்று முன்தினம் மாலையில் நுழைந்ததைத் தொடர்ந்து, நேற்று முகாமைச் சூழவுள்ள பகுதிகளில் கடும் சண்டை மூண்டது.

இதேசமயம் கொம்படிப் பகுதியிலும் நேற்றுப் பகல் படையினர் நகர முயன்றதை அடுத்து அங்கும் கடும் சண்டை இடம்பெற்றது.

குறிஞ்சாத்தீவுப் பக்கத்தில் நேற்றிரவு கடும் மோதல்கள் இடம் பெற்றுக்கொண்டிருந்ததாக பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

முகாமைச் சூழவுள்ள பகுதிகளில் இடம்பெறும் சண்டை குறித்து மேலதிக விவரங்கள் இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை கிடைக்கவில்லை.

இதற்கிடையில்—

வெற்றிலைக்கேணி முதல் ஆனையிறவு தடை முகாமின் பின்பகுதி வரை சங்கிலித் தொடராக நிலைகொண்டிருக்கும் படையினரில் ஒரு பகுதியினர், நேற்றுப் பகல் கொம்படிப் பகுதி ஊடாக வடக்கு நோக்கி (இயக்கச்சிப் பக்கமாக) முன்னேற முயற்சித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

படையினரை முன்னேற விடாது புலிகள் தடுத்துத் தாக்கியபோது அப்பகுதியிலும் கடும் சண்டை வெடித்தது.

அகோர விமானக் குண்டு வீச்சுக்களை நடத்தியபடி

[4 ஆம் பக்கம் பார்க்க]

### இளைஞர் காயம்

யாழ்ப்பாணம், ஆக. 5

கட்டுவன் இராணுவ முகாமில் இருந்து நேற்று மாலை 4-30 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி ஏழாலை ஊரங்குணையில் இளைஞர் ஒருவர் காயமடைந்தார்.

வீட்டு முற்றத்தில் விறகு வெட்டிக் கொண்டு நின்ற சுப்பிரமணியம் கருணாகரன் [வயது 16] என்பவரே காயமடைந்தவராவார். இவர் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-15)

## படுகாயமுற்ற நிலையில் மீட்கப்பட்ட துருப்புகள் அ'புரம் ஆஸ்பத்திரியில்!

கொழும்பு, ஆக. 5

ஆனையிறவு இராணுவ முகாமுக்குள் இருந்து படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டதாகக் கூறப்படும் 50 இற்கும் அதிகமான படையினர் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் மருத்துவ சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

ஸ்ரீலங்கா இராணுவ அதிகாரிகளை மேற்கோள்காட்டி ஏஜென்ஸிச் செய்திகள் இவ்வாறு தெரிவித்தன.

[4 ஆம் பக்கம் பார்க்க]

## முற்றுகை முறியடிப்பு அரசுக்கு பெரு வெற்றியாம்!

கொழும்பு, ஆக. 5

ஆனையிறவு முகாம் முற்றுகையை முறியடித்தமை மிகப் பெரிய வெற்றி என்று ஸ்ரீலங்கா பாதுகாப்புப் படை உயர் அதிகாரிகள் கொழும்பில் தெரிவித்ததாக பி.பி.ஸி செய்தியாளர் கிறிஸ்தோபர் மொறிஸ் அறிவித்துள்ளார்.

இதேவேளை—

ஆனையிறவுப் போர் இன்னும் முடியவில்லை. அரசாங்கப் படைகள் தாமாக வந்து ஒரு பொறிக்குள் மாட்டிக் கொண்டன'' என்று விடுதலைப் புலிகளின் பேச்சாளர் ஒருவர் கூறியதாகவும் பி.

[4 ஆம் பக்கம் பார்க்க]

## இதுவரை 170 படையினரே இறந்தனர் என்கிறது அரசு

### 700 பேர் வரையில் காயமாம்

கொழும்பு, ஆக. 5

ஆனையிறவு இராணுவ முகாம் மீட்புச் சண்டையில் கடந்த சனிக்கிழமை வரை 170 படையினர் கொல்லப்பட்டனர் என்றும் சுமார் 700 படையினர் காயமடைந்தனர் என்றும் கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் அறிவித்தன. (இ-எ)

## களத்தில் விழும் ஆயுதங்களை கையேந்த முன் வாருங்கள்!

### புலிகள் பிரமுகர் சலீம் அழைப்பு

யாழ்ப்பாணம், ஆக. 5

தமிழீழ மண்ணை மீட்க களம் புகுந்து, அங்கே வீர மரணம் அடையும் போராளிகளின் ஆயுதங்களை ஏந்த மாணவர்களும், ஏனையோரும் முன்வர வேண்டும்.

களத்தில் விழும் ஆயுதங்களை மற்றையோர் கையில் ஏந்தினால் தான், தமிழ் மண்ணை மீட்டெடுக்க முடியும்.

விடுதலைப் புலிகள் பிரமுகர் திரு. சலீம் இவ்வாறு தமிழீழ மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

நேற்று கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரியில் நடைபெற்ற போர்க்கால கருத்தரங்கில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. சலீம் மேலும் கூறியதாவது:-

ஆனையிறவில் எமது போராளிகள் கடந்த 24 நாட்களுக்கும் மேலாக உறுதியுடன் நின்று போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

பல நவீன ஆயுதங்களுடன் வெற்றிலைக்கேணி- கட்டைக்

(3ஆம் பக்கம் பார்க்க)

## தெற்கில் வெடி கொளுத்தி மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம்

கொழும்பு, ஆக. 5

அரச மீட்புப் படையினர் ஆனையிறவு இராணுவ முகாமினுள் கடந்த சனிக்கிழமை மாலை 6.40 மணியளவில் நுழைந்தனர் என்ற செய்தி அறிவிக்கப்பட்டதும் தென் பகுதி நகர்களில் மக்கள் வெடிகள் கொளுத்தி மகிழ்ச்சி தெரிவித்தனராம்.

முகாமினுள்ளே நுழைந்த மீட்புப் படையினர் முகாமின் உட்பகுதி மற்றும் வெளிப் பகுதிகளில் தங்கள் நிலையை ஸ்திரப்படுத்தி வருகின்றார்கள் என்று அரசு சார்பில் நேற்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த மாதம் 14 ஆம் திகதி கட்டைக்காட்டில் இறக்கப்பட்ட படையினரே தற்போது ஆனையிறவு சென்றடைந்துள்ளனர். (இ-எ)

## தமிழக பல்கலைக் கழகங்களில் ஈழ அகதி மாணவர்கள் கல்வி பயில்வதற்கு தடை!

சென்னை, ஆக. 5

தமிழ் நாடு மாநிலத்தில் தங்கியுள்ள ஈழத் தமிழ் அகதி மாணவர்கள் தமிழகப் பல்கலைக்கழகங்களில் கல்வி பயில்வது தடைசெய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக இந்து பத்திரிகை செய்தி வெளியிட்டிருப்பதாக இலங்கை வானொலி நேற்று அறிவித்தது.

பல்கலைக்கழகக் கல்வி சம்பந்தமான பணிப்பாளர் சபையினர் நேரடியாக இந்த உத்தரவை விடுத்துள்ளனர் எனவும் 'இந்து' நாளிதழ் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது. (ஐ-எ)

## பிரிட்டனை விட்டு வெளியேற கிட்டுவுக்கு 10 நாள் அவகாசம்

### அதற்கு மறுத்தால் நாடு கடத்தப்படுவாராம்!

லண்டன், ஆக. 5

பிரிட்டனில் இருந்து வெளியேறும்படி விடுக்கப்பட்ட உத்தரவுக்கு இணங்க தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் பிரமுகர் திரு. சதாசிவம் கிருஷ்ணகுமார் (கிட்டு) பத்து நாட்களுக்குள் வெளியேற வேண்டும். வெளியேற மறுத்தால், அவர் நாடு கடத்தப்படுவார் என்று [illegible] வட்டாரங்கள் தெரிவித்தன.

—இப்படி செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

பிரிட்டனில் வைத்திய சிகிச்சை பெறுவதற்காக திரு. கிட்டுவுக்கு வழங்கப்பட்டுள்ள அனுமதி விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளதாக பிரிட்டனின் உள்துறை அமைச்சகம் கடந்த செவ்வாய்க்கிழமை வெளியிட்ட உத்தரவில் தெளிவுபடக் கூறியிருப்பதாகவும் இந்திய வானொலி அறிவித்தது.

திரு. கிட்டு தமது விருப்பத்திற்கு ஏற்ப எந்த ஒரு நாட்டுக்கும் செல்ல அவருக்கு பத்து நாள் அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே —

தாம் சிகிச்சை பெற வேண்டும் என்ற காரணம் காட்டி இந்த உத்தரவுக்கு அவர் எதிர்ப்புத் தெரிவிக்கக் கூடும் என்று விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் கூறின என்றும் செய்தி ஏஜென்ஸிகள் மேலும் தகவல் வெளியிட்டன. [உ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

மில்கவைற் புதிய திரவ சவர்க்காரம் சகல அழுக்கு அகற்றி. சலவைக்குச் சிறந்தது. அரைப்போத்தல் ரூ. 45/-. லேபலுடன் வெற்றுப் போத்தல் தந்தால் ரூபா 2/- கழிவு. 'மில்க்வைற்'.
(சி-0327)

நவீன எலக்ரோனிக் அக்கர்ய் ஓடியோ டெக், எக்கோ ஈகுவலைசர், C. D. பிளேயர், எலக்ரோனிக் டப்பிங் டெக், நெஷனல் வீடியோ டெக், நெஷனல் S-1 வீடியோ மிக்சர் முதலியன விற்பனைக்கு உண்டு. கிழமை நாட்களில் தொடர்பு கொள்ளவும்; விக்ரேஸ் இல. 23, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(17733)

## ரைப்ரைட்டர்கள் தேவை

தமிழ், ஆங்கிலம் தட்டச்சு இயந்திரங்கள் உடன் தேவை. மற்றும் பழுதடைந்த உதிரிப் பாகங்களுக்கு உபயோகிக்கக் கூடிய தட்டச்சு இயந்திரங்களும் வாங்கப்படும். பியூடோ என்ரப்பிறைசஸ், 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யர்ழ்ப்பாணம்.
(சி-0277)

## வினா – விடை

க. பொ. த. சாதாரண தரம் 1990 / 1991 சித்திரப் பாடம் பயிலும் மாணவ மாணவியருக்கு உபயோகமான வினாக்களும், விடைகளும் பூபாலசிங்கம், மண்டேலா, ஸ்ரீகாந்த், மக்மிலன், தினேஷ், ஆல்சிலோன், ஸ்ரீலங்கா, வாலாம்பிகா, சிவாஸ், பாரதி, தாரா, மிடில்போர்க் ஆகிய புத்தகசாலை எங்கும் பெற்றுக் கொள்ளலாம். (17719)

## வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், பீனிசம், தலையிடி, தலைகர்லவியல், சூதகக்குத்து, சரும நோய்கள் மற்றும் சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியர், சி. இராசரத்தினம், 121, 2 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். [4818]

## வெளிவந்து விட்டது

வெளிவந்து விட்டது. 10 ஆம், 11 ஆம் ஆண்டுக்கான 'தமிழ் இலக்கியம் சந்தர்ப்பம் கூறல்' By. செ. கதிர்காமத்தம்பி B. A, யே. அமலசீலன் B. A., பரியோவான் கல்லூரி, யாழ்ப்பாணம். வியாபாரிகளுக்கும், கல்லூரிகளுக்கும் விசேட கழிவு. விற்பனை: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
(சி/0274)

## செஞ்சிலுவைச் சங்க உறுப்பினருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஆகஸ்ட். 5
யாழ். இந்துக் கல்லூரியின் கனிஷ்ட செஞ்சிலுவைச் சங்க அங்கத்தவர்கள் இன்று திங்கள் காலை 9-30 மணிக்கு கல்லூரியில் சமுகம் அளிக்குமாறு கோரப்படுகின்றனர்.
(இ)

## 4 புதிய ஜனாதிபதி சட்டத்தரணிகள் நியமனம்

நான்கு புதிய ஜனாதிபதி சட்டத்தரணிகளை ஜனாதிபதி பிரேமதாஸா அண்மையில் நியமித்தார்.

அவர்களில் ஒருவர் தமிழர். அவரின் பெயர் திரு. லஷ்மன் கதிர்காமர்.

ஏனையவர்களின் பெயர்கள் வருமாறு; ஏ. எல். முகமது காசீம், காமினி குணரத்தினா, வர்ணபஸநாயகா.
(த-எ)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
20 - 3 - 1929

மறைவு:
[7 - 8 - 1988

திதி:
5 - 8 - 1991

### திருமதி தவமணி அப்பையா

அம்மா! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
கணவன், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இல.1, புதிய செம்மணி வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம். (17731)

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
28 – 11 – 1942

மறைவு:
05 – 08 – 1990

### அமரர் பிளேவியன் பேடினன்ட்

உமது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக!

உமது பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், பெற்றோர்,
சிறியதாய், சகோதர, சகோதரிகள்,
மச்சான்மார், மாச்சாள்மார்,
உற்றார், உறவினர்கள்.

1/5, கார்மேல் குறுக்கு வீதி,
குருநகர், யாழ்ப்பாணம். [17708]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணுலகில்:
20 – 8 – 190?

விண்ணுலகில்:
06 – 07 – 1991

### அமரர் சின்னப்பு முத்துவேலு

[ஓய்வுபெற்ற உதவி அத்தியட்சகர், நில அளவைத் திணைக்களம்]

ஐயா! தக்கார் தகவிலார் என்பதை அவர் தம் மக்களே கண்ணாடி போலக் காட்டுவர் ஐயா! நாங்கள் எவ்வகையாலும் உன் நிழற்கீழ் நின்று உன் உள்ளத்தையே பிரதிபலிக்கின்றோம். உங்கள் பொய்யுடல் அழிந்தாலும் உங்கள் மெய்யுடலை. ஐயா நீங்கள் எங்களிடம் பகிர்ந்து கொடுத்திருக்கிறீர்கள். நீங்கள் இன்றும் எங்களுடன் வாழ்ந்து கொண்டு இருக்கிறீர்கள்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

டிஸ்பென்சரி லேன்,
உரும்பராய்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரர்.
(17738)

## மலேரியா தடுப்பு வேலை ஆரம்பம்

கொழும்புத்துறை, ஆக. 5
யாழ். மாவட்டத்தில் மலேரியாத தடுப்பு வேலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பொதுமக்கள் நெருக்கமாக வாழும் பகுதிகளிலேயே வேலைகள் முதலில் தொடங்கப்பட்டுள்ளன.

மலேரியா தடுப்பு இயக்கத்தைச் சேர்ந்த ஊழியர்கள் குருநகர் மற்றும் சன நெருக்கடி மிகுந்த அகதி முகாம் போன்ற இடங்களுக்குச் சென்று நோய்த் தடுப்பு வில்லைகளை விநியோகிப்பதுடன், மலேரியா தடுப்பு மருந்து தெளிக்கும் வேலையிலும் ஈடுபட்டுள்ளனர். [த-30]

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியையும்



இறைவன் படைத்த நாள்:
07 — 09 — 1960

இறைவன் அணைத்த நாள்:
07 — 07 — 1991

### திருமதி சிவரூபன் சரஸ்வதி

(சந்திரா)

மாசில்லாத புன்னகை மறைந்ததேன்
பேசுமாயிரம் கதை முடிந்ததேன்
நிலவுதித்ததைப் போன்ற உன் முகத்தினில்
கல கலப்புக் கவிதை முடிந்ததேன்
ஆற ஓர் வழி சொல்லடி சந்திரா
அரற்று தெமமனம் ஆறுதல் கூறடி.

உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உம் பிரிவால் துயருறும்:
அன்புக் கணவன்,
உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

கனகரட்ணம் வீதி,
வட்டுக்கோட்டை. [17730]

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



வீர ஜனனம்:
21 — 12 — 1970

வீர மரணம்:
05 — 08 — 1990

### 2ஆவது லெப்ரினன்ட் மாதங்கி

(சுமதி மாணிக்கம்)

தமிழீழ தாகம் கொண்ட தாரகையே சுமதி நீ!
தணலாக மாறிச் சுட்டெரித்துவிட்டாய்
கோட்டையிலே பகைவர் தனை
மங்காப் புகழுடனே மாதங்கி எனப் பெயர் பெற்றாய்
மணம் வீசி மறத்தமிழர் மனதினிலே வாடா
மலரானாய்
துஞ்சிடுமா உன் நினைவு துவண்டிடுமோ உன் கனவு
அஞ்சி ஓடுறார் பார் அந்நியர்கள் அவலத்துடன்
எங்கே நாம் காண்போம் கண்மணியே உன் கமலமுகம்
எம்மண்ணில் மழலை கூட சுமக்குதம்மா உன் கனவை
ஓராண்டு என்னம்மா ஓராயிரம் யுகங்கள்
சென்றாலும்
ஒளிவீசிப் புகழ்பேசும் உன் நினைவை
மறந்திடோம் நாம்
ஓ ..... விடியல் தூரமில்லை.

எமது மாதங்கியுடன் இணைந்து கோட்டையிலே வீரமரணத்தைத் தழுவிக்கொண்ட ஏனைய வீரவேங்கைகளுக்கும் எம் வீர அஞ்சலியைத் தெரிவிக்கின்றோம்.

மாதங்கி வீதி,
வராத்துப்பளை,
பருத்தித்துறை.

– குடும்பத்தினர்.

(17737)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### சுடலை ஞானம்!

இருபத்திநான்கு நாள்கடும் போரின் பின்னர், ஆனையிறவு இராணுவ முகாமிற்குள் தனது மீட்புப் படைகள் நுழைந்ததாக, அரசாங்கம் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு அறிவித்தது.

அரசின் அத்தகவலுக்கு வானொலி, தொலைக்காட்சிகளில் மிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. விசேட செய்தியாக அடிக்கடி வானொலியில் அறிவிக்கப்பட்டது.

பிரஸ்தாப செய்தி அறிவிக்கப்பட்ட சில நிமிட நேரங்களில் ஜனாதிபதியின் விசேட அறிக்கை ஒன்றும் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டது.

அரசாங்க இயந்திரம் இது விடயத்தை கையாண்ட தன்மை, இது முன்னேற்பாட்டுடன், முன்னொழுங்குடன் செய்யப்பட்டதோ என்ற சந்தேகத்தை எவர் மனதிலும் எழுப்புவதாக அமைந்தது.

அதாவது, ஆனையிறவு முகாம் போரினால் அரசாங்கத் தரப்பில் ஏற்பட்டு வரும் ஆளணி இழப்புகளை யொட்டி, தென்னிலங்கை மக்கள் மத்தியில் விரக்தியும், சலிப்பும், அரசுக்கெதிரான உணர்வும் பரவாமல் தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட யுக்தி போலவே தென்பட்டது! அது எப்படியோ...

அந்த அறிவிப்பைத் தொடர்ந்து ஜனாதிபதி வெளியிட்ட அறிக்கையும், பாதுகாப்புத்துறைச் செயலாளர் சிறில் ரணதுங்கா வெளியிட்ட கருத்துமே முதன்மைப்பட்டு நிற்கின்றன.

யுத்தத்தில் எவரும் வெற்றி பெறுவதில்லை. எல்லோரும் தோல்வி அடைபவர்களே. சமாதானத்தில் தான் எல்லோரும் வெற்றி பெறுகிறார்கள். மனித இனப் பிரச்சினைகளுக்கு சண்டை மூலம் தீர்வு காண முடியாது— என்று ஜனாதிபதி கூறியிருக்கிறர்.

இந்தச் சித்தாந்தம் இப்போது தான் ஜனாதிபதிக்குப் புரிந்ததா? அல்லது நடைமுறை அனுபவத்தால், இப்போது தான் அவரால் உணர முடிந்ததா?

முன்னரே புரிந்திருந்தால், உணர்ந்திருந்தால் கடந்த பதினைந்து மாதங்களாக இராணுவத் தீர்வில்— யுத்தத்தில்— நம்பிக்கை வைத்து அவ்வழி சென்றது ஏன்?

யுத்தத்தில் இராணுவ வெற்றி தோல்வி இல்லையென்று இல்லை. வெற்றியும், தோல்வியும் உண்டு. ஆனால் தமிழர் பிரச்சினைக்கு யுத்தம் தீர்வாகாது என்பதை எத்தனை பேர், எத்தனை தடவைகள் கூறியும் அதனைப் பொருட்படுத்தாமல் இராணுவ வழி சென்றவர் ஜனாதிபதி. அவர் இப்போது திடீரென இவ்வாறு வெற்று வேதாந்தம் பேசுவது யாரை ஏமாற்றுவதற்காக?

போரில் வெற்றி தோல்வி முக்கியமல்ல. உயிர்கள் பலியாவது குறித்தே நாம் சிந்திக்க வேண்டும் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரணதுங்கா கூறியிருப்பது சுத்தச் சுடலை ஞானம்!

கடந்த 15 மாதங்களில் பல்லாயிரம் அப்பாவித் தமிழ் மக்கள் அரச படைகளால் கொலையுண்டபோது, உயிர்களின் மதிப்பு அவர்களுக்குத் தெரியவில்லை. ஆனையிறவுப் போரில் தென்னிலங்கைச் சிங்கள இளைஞர்கள் அவலமாக இறக்கிறார்களே என்று நினைக்கும்போதுதான் உயிரின் மதிப்புப் புரிகிறது!

இந்தக் சுடலை ஞானம் வெற்றுப் பேச்சாக இருக்குமே அன்றி, நல்ல பயனைத் தர உதவும் என்று நம்புவதற்கில்லை.

# இன அழிப்பு நடைபெறுவது உள்நாட்டு விவகாரமல்ல!

## தலையிட வெளிநாடுகளுக்கு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஆக. 5

தமிழர் பிரச்சினையில் ராஜதந்திர ரீதியில் தலையிடுமாறும், நியாயம் வழங்கும்படி ஸ்ரீலங்கா அரசாங்கத்தை நிர்ப்பந்திக்குமாறும்—

கிறிஸ்தவ பொது நிலையினர் முன்னணி கொழும்பில் உள்ள வெளிநாடுகளின் தூதர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஆஸ்திரேலியா, கனடா, அமெரிக்கா, இந்தியா, சுவீடன், சுவிட்சர்லாந்து உட்பட 22 நாடுகளின் தூதுவர்களிடம் இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

சிறுபான்மை இனத்தை, ஒரு சமூகத்தை, பொருளாதாரத் தடைகளாலும் குண்டு வீச்சுத் தாக்குதல்களாலும் அழிப்பது உள்நாட்டு விவகாரங்கள் அல்ல, எனவே ராஜதந்திர ரீதியில் எமது பிரச்சினையில் நீங்கள் தலையிட்டு, நியாயம் வழங்க ஸ்ரீலங்கா அரசை நிர்ப்பந்திக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்— என்று அந்த மகஜரில் கோரப்பட்டுள்ளது.

கடந்த ஒரு வருட காலத்தில் உணவு, மருந்து, எரிபொருள் என்பன மிகக் குறைவாக அனுப்பட்ட விவரமும் மகஜருடன் பட்டியல் போட்டுக் காட்டப்பட்டுள்ளது.

மற்றும் கல்வி, விவசாயம் என்பன பாதிக்கப்பட்டிருப்பது குறித்தும்—

மனித உரிமைகள் மீறப்படுவது, அகதிகள் புறக்கணிக்கப்படுவது என்பன குறித்தும் மகஜரில் புள்ளி விவரங்களுடன் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மாவட்டங்களில் குண்டு வீச்சினால் கொல்லப்பட்டோர், ஆயுதப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டோர், எரியூட்டப்பட்ட சடலங்கள், கோரக் கொலைகள், பாலியல் வன்முறைக்கு உட்படுத்திக் கொலை செய்யப்பட்டோர், கைது செய்யப்பட்டுக் காணாமற் போனோர். இராணுவ நடவடிக்கைகளால் காயமடைந்தோர் ஆகியோரின் எண்ணிக்கையைக் காட்டும் பட்டியலும் மகஜரில் அடங்கி உள்ளது. (அ)

### கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஆக. 5

பரியோவான் கல்லூரியில் கல்வி பயிலும் ஆண்டு 10இற்கு மேற்பட்ட சகல மாணவர்களையும் இன்று காலை 10.30 மணிக்கு கல்லூரியில் கூடுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஒ)

## வடமராட்சி கிழக்கில் வயிற்றோட்ட நோய்!

தாளையடி, ஆக. 5

வடமராட்சி கிழக்கில் குழந்தைகளுக்கு வயிற்றோட்ட நோய் தீவிரமாகப் பரவி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி, ஆழியவளை, உடுத்துறை, வத்திராயன், மருதங்கேணி ஆகிய இடங்களில் இருந்து இடம்பெயர்ந்த நூற்றுக்கணக்கான குடும்பங்கள் வடமராட்சி கிழக்கில் நாகர்கோவில், அம்பன், கற்கோவளம் ஆகிய இடங்களில் தங்கியுள்ளனர்.

இக்குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளே வயிற்றோட்ட நோயினால் அதிகம் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பகுதிகளில் வரட்சியினால் கிணறுகளில் நீர் மட்டம் குறைவாகக் காணப்படுகின்றது, அத்துடன் இடம்பெயர்ந்த பல குடும்பங்கள் ஒரே கிணற்றைப் பாவிக்க வேண்டிய நிலையிலும் இருக்கின்றன.

இதேவேளை—

இடம் பெயர்ந்து வந்து நாகர்கோவில், மாமுனை, செம்பியன்பற்று, அம்பன், குடத்தனை, கற்கோவளம் ஆகிய பகுதிகளில் தங்கியுள்ள சுமார் ஆயிரத்து 400 குடும்பங்களுக்கு இதுவரை சீரான சுகாதார, வைத்திய வசதிகள் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனால் மேலும் பல தொற்று நோய்கள் இப் பகுதியில் தீவிரமாகப் பரவக்கூடிய ஆபத்து இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-144)

## ஆந்திராவில் நிலக்கண்ணி 8 பொலீஸார் பலி

ஹைதரபாத், ஆக. 5

ஆந்திர மாநிலத்தில் நக்ஸலைட் தீவிரவாதிகள் நடத்திய நிலக்கண்ணி வெடித் தாக்குதலில் 8 பொலீஸார் கொல்லப்பட்டனர். அவர்களில் ஆறு பொலீஸார் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர். மேலும் இரண்டு பொலீஸார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தனர்.

## மாதகலில் மக்கள் அஞ்சலி

யாழ்ப்பாணம், ஆக. 5

ஆனையிறவில் நேற்று முன்தினம் நடந்த மோதலில் வீரமரணமடைந்த போராளிகளில் மூவரின் புகழுடல்கள் நேற்று மாதகல் புனித சூசையப்பர் மகாவித்தியாலயத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தன.

பின்னர் புகழுடல்கள் கோப்பாய் மாவீரர் மயானத்தில் தகனம் செய்யப்பட்டன.

பிரதீப் (நாகமுத்து செல்வராசா — புன்னாலைக்கட்டுவன்), அருண் (கோவிந்தசாமி அருளானந்தம்— மாதகல்). ஹென்றி (சின்னராசா சிறிரங்கம்—கும்புறுப்பிட்டி) ஆகியோரே வீரமரணமடைந்த போராளிகள் ஆவர். (ஒ)

## வெற்றியும், தோல்வியும் முக்கிய விடயம் அல்ல!

### ஜெனரல் ரணதுங்க கூறுகிறார்

கொழும்பு, ஆக. 5

போரில் வெற்றி, தோல்வி முக்கியமல்ல. உயிர்கள் பலியாவது குறித்தே நாம் சிந்திக்க வேண்டும்.

இப்படி பாதுகாப்ப அமைச்சுச் செயலாளர் ஜெனரல் சிறில்ரணதுங்க தெரிவித்தார் என்று கொழும்பு பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அநியாயச் சாவைத் தடுக்கும் முயற்சிகளில் தான் ஜனாதிபதி ஈடுபட்டிருக்கிறார் என்றும் ஜெனரல் ரணதுங்கா தெரிவித்திருக்கிறார்.

இதே வேளை — ஆனையிறவு இராணுவ முகாமினுள் மீட்புப் படையினர் நுழைந்துவிட்டனர் என்ற தகவலைத் தொடர்ந்து — ஜனாதிபதி பிரேமதாசாவின் அறிக்கை ஒன்று கடந்த சனிக்கிழமை இரவு ரூபவாஹினியில் வாசிக்கப்பட்டது என்றும் —

விடுதலைப் புலிகள் அமைதி வழியில் பிரச்சினைகளைத் தீர்க்க இனி முன்வரவேண்டும்

(4ஆம் பக்கம் பார்க்க)

### ஆனையிறவு, வெற்றிலைக்கேணி பகுதிகளில்

# தமிழீழ மண் மீட்புப் போரில் களப்பலியான வேங்கைகள்

வெற்றிலைக்கேணி — கட்டைக்காட்டுப் பகுதியிலும், ஆனையிறவு முகாம் முற்றுகைப் போரிலும் ஸ்ரீலங்காப் படையினருடன் இடம்பெற்ற மோதல்களில் கடந்த மாதம் 16ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் வீரமரணமடைந்த 105 விடுதலைப் புலி போராளிகளின் விவரம் வருமாறு:-

1. குமரப்பா (பாலசுப்பிரமணியம் சிவபாலன்) தெல்லிப்பளை, 2. சுகந்தன் (பூபாலசிங்கம் பூலோகச்சந்திரன்), சுன்னாகம், 3. ஸ்ரீரங்கன் (யோகதாஸ் நேசராசா), துன்னாலை. 4. மெளனி (தாமோதரம்பிள்ளை மணிவாசன்), கொக்குவில். 5. புஷ்பன் (நாகராசா புலேந்திரன], கைதடி. 6. வினோத் (மோர்கனதாஸ் சுரேஷ்நிரஞ்சன்), மயிலிட்டி. 7. யசோ (லோகேஸ்வரன் சுதாகர்), ஓட்டுமடம், 8. அனுசன் (தேவசகாயம் குணம்), குருநகர். 9. சங்கர் (வடிவேல் ஜெயந்திரன்) நாவற்குழி. 10. பாண்டியன் (துரைசிங்கம் கிருஷ்ண குமார்), பண்டத்தரிப்பு. 11. அறிவொளி (ஸ்ரீபத்மநாதன் சத்தியசீலன்), சுண்டுக்குளி. 12. இளஞ்செழியன் (யோகேஸ்வரன் அரவிந்தன்), வல்வெட்டித்துறை. 13. பட்சன் (சீனியர் உதயராசா). புன்னாலைக்கட்டுவன் தெற்கு. 14. [illegible] சப்பு (அன்ரனி அமலநேசன்) இருமலை. 15. டயஸ் (நாகமுத்து ஸ்ரீசங்கர்), நீர்வேலி. 16. சுருளி (சிவகுரு அப்பன்), மயிலிட்டி. 17. வினித்தா (தியாகராசா இலங்கேஸ்வரி), புலோலி.

18. சிவசங்கர் [யோசப் ஜெயமணி) வவுனியா, 19. விசயன் [வேலுப்பிள்ளை மாரிமுத்து) கொட்டடி, 20. நகுலேஸ்வரன் [சிங்கார வடிவேல் தவக்குமார்] வல்வெட்டித்துறை, 21. கைலன் [அரியரட்ணம் குசந்தன்] வட்டுக்கோட்டை, 22. நிசாந்தன் [அருளானந்தம் யூட் அன்ரனி] நெடுந்தீவு, 23. மணிவாசன் [கணேசநாதன் ஜனார்த்தனன்] இணுவில், 24. கில்பேட் [ஜோசப்-ஜொனி] திருகோணமலை, 25. இகபால் [நாகலிங்கம் கிருஷ்ணகுமார்] திருகோணமலை, 26. ராஜபாரதி [நாகலிங்கம் பதேவானந்தன்] செங்கலடி, 27. காண்டி [கனகரத்தினம் கனகேஸ்வரன்] துணுக்காய். 28. வேணு [கந்தசாமி பிரபா], கல்லடி, 29 ஆனந்தன் [நேசா அமலதாஸ்] சுண்டுக்குளி, 30. தேவா [அற்புதநாதன் குகதாஸ்] ஏழாலை, 31. ஜேம்சன் [சாத்தையா ராமு] முறிகண்டி, 32. சுரேஷ் [சுப்பிரமணியம் சிவகுமார்] சித்தன்கேணி, 33. ராவ் [சின்னையா மோகேஸ்வரன்] [illegible] 34. [illegible] [illegible] சேகர்] மானிப்பாய்.

35. பப்பா [செல்வம் கணேஷ்] யாழ்ப்பாணம். 36. சதீஷ் [தம்பையா யோகநாதன்] வரணி.

37. தவச்செல்வி (ராமநாதன் சித்திராஞ்சலி), சாவகச்சேரி. 38. நந்தன் (சின்னத்துரை ஜீவானந்தன்), சாவகச்சேரி. 39. தேவா (சந்திரமோகன்), மட்டக்களப்பு. 40. சேரன் (சண்முகம்றோய் செழியன்), பண்டாரவளை. 41. பிறேம்நாத் (சீனிவாசகம் கௌரிநாதன்) திருக்கோவில். 42. எழில் (சந்திரசேகரம் சசிதரன்), இளவாலை. 43. இந்திரன் (சண்முகம் பாகரன்), மட்டக்களப்பு. 44. திலக் (சேதுலிங்கம் கிருஷ்ணவரதன்), வல்வெட்டித்துறை. 45. ரமணி (சின்னத்துரை ரமணன்), ஓட்டுமடம். 46. முரளி (மகாலிங்கம் தவக்குமார்), நெடுந்தீவு மேற்கு. 47. இருதயராஜ் (நிக்கலஸ் லோறன்ஸ்), அம்பாறை. 48. அகிலன் (வேலுப்பிள்ளை கந்தசாமி), நெடுங்கேணி. 49. மணிவண்ணன் (மேரியோசப் பிரான்சிஸ் சேவியர்), முருங்கன் 50. வீரவன் (சிவன் சந்திரன்), திருமலை.

வீரமரணமடைந்த 105 போராளிகளின் ஏனைய 55 பேரது பெயர் விவரங்களும், குறிஞ்சாத்தீவு உப்பள விடுதி தாக்குதலில் கடந்த 27 ஆம் திகதி களப்பலியான 65 வேங்கைகளின் பெயர், விவரங்களும் உதயனில் பின்னர் வெளியாகும்.

### களத்தில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

காட்டுப் பகுதியில் தரையிறக்கப்பட்ட 8,000 க்கும் மேற்பட்ட படையினருடனும், ஆனையிறவில் சிக்கியுள்ள 800 க்கும் மேற்பட்ட படையினருடனும் போராடி வருகிறோம்.

சகல வசதிகளையும் கொண்ட பல ஆயிரக்கணக்கான படையினருடன் 3 வாரங்களுக்கும் மேலாக எமது போராளிகள் சளைக்காது, ஓயாது போராடி வருகின்றனர்.

இதற்கு போராளிகளின் மன உறுதியும், திடமும், மக்களின் பங்களிப்புமே காரணங்கள் ஆகும்.

ஆனையிறவு போரில் முன்நூறுக்கும் மேற்பட்ட வேங்கைகள் களப்பலியாகியுள்ளனர். மற்றும் பலர் காயமடைந்துள்ளனர். இவர்களது ஆயுதங்கள் கீழே வைக்கப்பட்டுள்ளன. அந்த ஆயுதங்களை ஏனையோர் கையில் எடுக்க வேண்டும்: இந்த ஆயுதங்களையும் எமது பாசறைகளில் தேங்கியுள்ள ஆயுதங்களையும் ஏனையோர் கையில் எடுத்தால. எதிரியை எளிதில் எமது மண்ணில் இருந்து விரட்டியடிக்க முடியும்; இது உறுதி — என்றார்.

கருத்தரங்கில் விடுதலைப் புலிகளின் மாணவர் இயக்க யாழ். மாவட்டப் பொறுப்பாளர் மருசிலப்பாவும் உரையாற்றினார்.

[ஒ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழப் போராளிகளை அடக்க

# தமிழ்நாடு பொலீஸாருக்கு நவீன ஆயுதம் வழங்க முடிவு

சென்னை, ஆக. 5

தமிழ்நாடு பொலீஸாருக்கு ராணுவத்தளபாடத் தொழிற்சாலைகளிலிருந்து நவீன ஆயுதங்கள் வழங்கப்படும்.

இந்திய மத்திய பாதுகாப்பு அமைச்சர் சரத்பவார் மேற்கண்டவாறு அறிவித்துள்ளார்

தமிழகத்தில் இலங்கைப் போராளிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் முகமாக இந்த ஆயுதங்களைப் பாவிக்கப் போவதாகவும் திரு. பவார் தெரிவித்திருக்கிறார்.

எல்லைப்புறக்காவல் படையின் சில பிரிவுகளை தமிழகத்துக்கு அனுப்பி வைக்கும்படி முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா விடுத்துள்ள கோரிக்கை பற்றி, தாம் மத்திய உள்துறை அமைச்சர் சவானுடன் பேச்சுக்கள் நடத்தவிருப்பதாகவும் திரு. பவார் சொன்னார்.

(த-எ)

## பொன்னாலையில் ஷெல் தாக்கு!

யாழ்ப்பாணம், ஆக. 5

காரைநகரில் இருந்து நேற்றும் நேற்றுமுன்தினமிரவும் பொன்னாலைப்பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

நேற்றுமுன்தினமிரவு ஏவப்பட்ட ஷெல்களினால் பொன்னாலையில் ஒரு கடையும், ஒரு வீடும் சேதம் அடைந்தன.

நேற்று மாலை 3 மணிக்கு ஏவப்பட்ட ஷெல்கள் வெளியான பகுதிகளில் விழுந்து வெடித்தன. சேதம் ஏதும் ஏற்படவில்லை. (உ-15)

# படையினருக்கு நன்றி கூறி ஜனாதிபதி அறிக்கை

கொழும்பு. ஆக. 5

ஆனையிறவு இராணுவ முகாமுக்குள் இராணுவ மீட்பு அணி நுழைந்ததாகக் கூறப்படும் செய்தி வெளியானதை அடுத்து ஜனாதிபதி பிரேமதாஸா குறுகிய அறிக்கை ஒன்றை நேற்று முன்தினம் இரவு வெளியிட்டார்.

அந்த அறிக்கையில் அவர் தெரிவித்ததாவது:

விடுதலைப் புலிகள் இனியாவது தமது பயங்கரவாத நடவடிக்கைகளை நிறுத்திக் கொண்டு அப்பாவி உயிர்களைக் காப்பாற்றுவார்கள் என எண்ணுகிறேன்.

யுத்தத்தில் எவரும் வெற்றி பெறுவதில்லை. எல்லோரும் தோல்வி அடைபவர்களே. சமாதானத்தில்தான் எல்லோரும் வெற்றி பெறுகிறார்கள். கலந்தாலோசனை மூலம்தான் நாம் மனித இனப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும்; சண்டைமூலமல்ல:

இந்தத் தருணத்தில் எனது சிந்தனைகள் உயிர்த் தியாகம் செய்த, காயங்களுக்குள்ளான, துணிச்சல் மிக்க படையினர்மீதே செல்கின்றன. முப்படையினருக்கும் நாட்டு மக்கள் சார்பில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்,

## யூத குடியிருப்பை நிறுத்த கோரிக்கை

கைப்பற்றப்பட்ட அரபுப் பிரதேசங்களில் யூதக் குடியிருப்புகள் நிறுவுவதை உடனடியாக நிறுத்தும் படி இஸ்ரவேல் அரசாங்கத்தை சோவியத் யூனியன் நேற்றுக் கேட்டுக் கொண்டது.

அக்டோபரில் நடைபெறவுள்ள மத்திய கிழக்கு சர்வதேச சமாதான மாநாட்டை ஒட்டி இந்த வேண்டுகோளை மாஸ்கோ அரசு விடுத்துள்ளது. [இ-எ]

## 1 கோடி நாய்கள் கொல்லப்பட்டன

கடந்த மூன்று வருடங்களில் சீனாவின் யுன்னான் மாகாணத்தில் மட்டும் சுமார் ஒரு கோடி நாய்கள் அடித்துக் கொல்லப்பட்டுள்ளன.

# வடக்கே பொருள்கள் எடுத்து வருவதற்கு புனர்வாழ்வு அமைச்சே அனுமதி வழங்கும்

கொழும்பு, ஆக. 5

வட பகுதிக்கு பொருள்களை எடுத்துச் செல்வதற்கான அனுமதியை வழங்கும் அதிகாரம் புனர்வாழ்வு அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதற்கான உத்தரவை ஜனாதிபதி பிரேமதாசா விடுத்திருக்கிறார் என்று கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வடபகுதிக்கு எத்தகைய பொருள்களை எடுத்துச் செல்ல அனுமதிக்கக் கூடாது என்பதை புனர்வாழ்வு அமைச்சு நிர்ணயம் செய்து, ஏனையவற்றுக்கு அனுமதி வழங்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

''வட பகுதிக்கு எடுத்துச் செல்லப்படும் சில பொருள்கள் எமக்கு எதிரான சக்திகளிடம் போய்ச் சேருகின்றன. இதற்கு அனுமதிக்க முடியாது'' என்றுஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

[த-எ]

## மன்னிப்புச்சபை பாகிஸ்தான் மீது கண்டனம்

லண்டன், ஆக. 3

பாகிஸ்தானில் காவலில் வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் பாதுகாப்பு அதிகாரிகளால் சித்திரவதைக்குள்ளாக்கப்படுகின்றனர்.

இவ்வாறு சர்வதேச மன்னிப்புச்சபை பாகிஸ்தான் அரசு மீது கண்டனம் தெரிவித்திருக்கிறது.

[இ-எ]

## 43 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 21 — 03 — 1928

மறைவு: 24 — 06 — 1991

### அமரர் வேலுப்பிள்ளை கந்தசாமி

(Retd. Supt. of Excise)

திதி: 05 - 08 - 1991

எங்களையெல்லாம் ஆளாக்கி ஆறாத் துயரில் ஆழ்த்தி விட்டு மீளாத்துயில் கொண்ட அன்பு அப்பாவே! உங்கள் ஆத்மா சாந்தியடைய நல்லூர் முருகனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் வாடும்
குடும்பத்தினர்.

211/13 T, கோயில் வீதி,
நல்லூர்.

(17636)

## ஆனையிறவு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

படையினர் முன்னேற முயன்றதாகவும் —

விடுதலைப் புலிகளின் கடும் தாக்குதல்களினால் படையினரின் முயற்சி முறியடிக்கப்பட்டதாகவும் தெரியவந்தது.

விமானக் குண்டு வீச்சினால் கொம்படிப் பகுதி புகைமண்டலமாகக் காட்சியளித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது,

நேற்றைய மோதல்களின் போது இராணுவத் தரப்பில் பெரும் சேதம் ஏற்பட்டு இருக்கக் கூடும் என்றும் கருதப்பட்டது. (உ-15)

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் யாழ்ப்பாணக் கிளை.

### நீர்வேலி தெற்குக்கான ஆரம்ப சுகாதார கவனிப்பு அமைப்பாளர்கள்

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. க. பொ. த (சாதாரணம்) பரீட்சையில், சுகாதாரம், கணிதம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன், ஆறு பாடங்களில் சித்தி பெற்ற ஆரம்ப சுகாதார கவனிப்பு முதலுதவிப் பயிற்சி, சுகாதாரத்தில் போதிய பயிற்சி போன்றவற்றில் அனுபவமுடைய, 25 வயதுக்கு மேற்பட்ட, மேற்குறிப்பிட்ட கிராமத்தைச் சேர்ந்த பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தகைமையுடையோர் 16 - 8 - 91 க்கு முன் விண்ணப்பிக்கவும். விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை 19 - 8 - 91 முற்பகல் 9-00 மணிக்கு கோப்பாய் சுகாதார சேவை அதிகாரி பணிமனையில் நடைபெறும். தனித்தனி கடிதங்கள் அனுப்பப்படமாட்டாது.

ச. சிவானந்தராசா,
கௌரவ செயலாளர்,
இ. செ. சங்கம் [யாழ். கிளை].

73, கண்டி வீதி.
யாழ்ப்பாணம்.
03 - 8 - 91.

[சி-0328]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 08 — 07 — 1910

மறைவு: 06 — 07 — 1991

### அமரர் கந்தையா சிவானந்தன்

[இளைப்பாறிய கட்டடத் திணைக்கள லிகிதர்]

எம்மையெல்லாம் அன்புடனும், பண்புடனும், பாசத்துடனும் வாழவைத்த தெய்வமே! உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று அன்னாரது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளில் கலந்து, அன்னாரது ஆத்மசாந்திக்காக எம்முடன் சேர்ந்து இறைவனைப் பிரார்த்திக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இல. 92, கொழும்புத்துறை வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

[17729]

## முற்றுகை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பி. ஸி. அறிவித்தது.

''ஆனையிறவு மீட்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவத்தை அடுத்து, பேச்சுக்கு வருமாறு ஜனாதிபதி பிரேமதாசா விடுதலைப் புலிகளுக்கு விடுத்த அழைப்பை அவர்கள் ஏற்றுக்கொள்வது என்பது சந்தேகமே. பிரேமதாசா இவ்வாறு முன்னரும் பலதடவைகள் பேச்சுக்கு வருமாறு அழைப்பு விடுத்திருந்தார். ஆனால் நிபந்தனையுடன் கூடிய பேச்சுக்கான அவரின் அழைப்பை புலிகள் தொடர்ந்தும் நிராகரித்து வருகின்றனர்'' — என்றும் பி. பி. ஸி. தெரிவித்தது. [உ-எ-3]

## மீட்கப்பட்ட...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இதேவேளை—

அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கும் படையினரை பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்கவின் பாரியார் நேற்று அங்கு சென்று பார்வையிட்டார்.

திருமதி ரணதுங்க படையினருக்கு ஆறுதல் கூறியதுடன், பரிசுப் பொருள்களையும் வழங்கினார். இந்த நிகழ்ச்சிகள் ரூபவாஹினியில் ஒளிபரப்பப்பட்டன.

## வெற்றியும்.:

[3ஆம் பக்கத் தொடர்ச்சி]

என்று அந்த அறிக்கையில் ... னார் என்றும் பி. பி. ஸி. நேற்று அறிவித்தது.

## மரண அறிவித்தல்

### திருமதி பாக்கியரத்தினம் மரியதாஸ்

சூராவத்தையைச் சேர்ந்த திருமதி பாக்கியரத்தினம் மரியதாஸ் நேற்றுக் காலமானார்.

இவர் காலஞ்சென்ற ஆசிரியர் மரியதாஸ் சடாசிவத்தின் அன்பு மனைவியும், நீற்றா (வவுனியா), காலஞ்சென்ற றீசா, சாந்தம் (சூராவத்தை) ஆகியோரின் அன்புத் தாயாரும், பிரேமராஜ் (வவுனியா), ராஜன் பெனடிக்ற் (யாழ்ப்பாணம்), றெஜினோல்ட் போல் (யாழ்ப்பாணம் பார்ட்டா கொம்பனி முன்னாள் முகாமையாளர்) ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று திங்கட்கிழமை (5-8-91) மாலை 3-00 மணியளவில் ஏழாலை சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி சாந்தம் றெஜிபோல்

[17470]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 05 - 08 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org